தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 170 /ந/2023
நாள் 31.07.2023

திரு.மா.கார்த்திக்,
காடையாம்பட்டி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
இடங்கணசாலை நகராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், 16–வது வார்டு, காடையாம்பட்டி தெற்கு தெரு, க.எண்.143 என்ற முகவரியில் வசிக்கும் திரு.மா.கார்த்திக் என்பவரின் 07.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.06.2023 அன்று பெறப்பட்டு 170/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், 16–வது வார்டு, காடையாம்பட்டி தெற்கு தெரு, க.எண்.143 என்ற முகவரியில் வசிக்கும் திரு.மா.கார்த்திக் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காடையாம்பட்டி, வார்டு எண்.16–ல் உள்ள இடங்கணசாலை பிட் II வருவாய் கிராம சர்வே எண்.214/2–ன் மேற்கு பகுதி எல்லையில் சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக இருபத்தைந்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருந்து வருகிறோம்.

இந்த சர்வே எண். 214/2 ஆனது 5.90 தீர்வை கொண்ட அரசு புஞ்சை தரிசு நிலமாகும். இப்பகுதியில் குடியிருக்கும் நாங்கள் இன்றுவரை வீட்டிலிருந்து வெளியில் சென்று வர சர்வே எண்.214/2–ன் மேற்கு பகுதியிலுள்ள தென் வடலாகவும் வட தென்புறமாகவும் உள்ள தரிசு நிலத்தில் சுமார் 50 அடி பொதுவழிப்பாதையாக பயன்படுத்தி வந்தோம். இச்சூழலில் இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காடையாம்பட்டி சந்தைபேட்டை வார்டு எண்.16–ல் உள்ள சர்வே எண்.214/2–ன் மேற்கு புறம் தென்வடலாக ஒரு பகுதியில் மட்டும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 182 (1) (2)–ன்படி அளவு கடப்பு அகற்றுதல் தொடர்பாக

அறிவிப்பு கடிதம் மற்றும் இறுதி அறிவிப்பு கடிதம் எனது வீட்டில் ஒட்டப்பட்டது. அதன்படி என்னுடைய சொந்த செலவில் ஆக்கிரமிப்பை அகற்றிக் கொண்டேன்.

இந்நேர்வில் கடந்த 28.04.2023 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் ''கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022 – 2023–ன் '' கீழ் வாரச்சந்தை மேம்பாட்டுப்பணி தொடர்பாக கட்டடம் கட்ட JCB இயந்திர வாகனம் மூலம் குழி தோண்டப்பட்டது. இந்நேர்வில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வந்த எனது குடிநீர் இணைப்பானது இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்தில் பணியாற்றும் நகரமைப்பு அலுவலர் (TPI) திரு.பிரேம் ஆனந்த் என்பவரின் முன்னிலையில் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் பணியாற்றும் 2 காவலர்களின் பாதுகாப்புடன் மேற்கண்ட பணியின் ஒப்பந்ததாரரான VPM Projects வேலை ஆட்கள் மூலம் சட்ட விரோதமாக எந்த ஒரு முன்அறிவிப்பும் இன்றி எனது குடிநீர் இணைப்புக்கு மாற்றுவழி ஏற்படுத்தி தராமல் எனது குடிநீர் இணைப்பானது துண்டிக்கப்பட்டது. குடிநீர் இணைப்பானது துண்டிப்பு செய்தபொழுது பொதுப்பாதை மற்றும் குடிநீர் இணைப்புக்கு மாற்று வழி ஏற்படுத்தி தர கேட்டபொழுது நகரமைப்பு அலுவலர் (TPI) திரு. பிரேம் ஆனந்த் என்பவர் என் மனைவி மற்றும் தாயாரை ஒருமையில் பேசி அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதன்பிறகு 14 அடி அகலம் கொண்ட சந்து பாதையாக விடப்பட்டது. ஆனால் குடிநீர் இணைப்பை சீரமைத்து தரவில்லை.

மேலும் வாரச்சந்தை மேம்பாட்டுப் பணியின் ஒப்பந்ததாரரான VPM Projects வேலை ஆட்களை கொண்டு இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்தினர் JCB இயந்திர வாகனம் மூலம் கடந்த 04.05.2023 தேதியன்று மாலை 6.30 மணிக்கு மேல் என் வீட்டு வாசலின் முன் தென்வடலாக 30 மீட்டர் நீளம், 3 மீட்டர் அகலம், 2 மீட்டர் ஆழம் பள்ளம் தோண்டி (கழிவு) மண் மற்றும் பெரிய கற்களை, நாங்கள் வெளியில் சென்று வராதவாறு பொது பாதையை தடுத்து நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு முன் போடப்பட்டது. பிறகு இரு தினங்களாக அந்த மண் மற்றும் கழிவு கற்களை முறையாக சீரமைத்து, முறையாக சரிப்படுத்தி அப்புறப்படுத்தாமல், குடியிருக்கும் வீட்டிலிருந்து வெளியே சென்று வர பாதை ஏற்படுத்தாமல், அலட்சியமாகவும், அஜாக்கிரதையாகவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் பணி ஒப்பந்ததாரர் செயல்பட்டுள்ளனர். மேலும் இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்தினர், பொதுமக்களுக்கு எந்த ஒரு பாதுகாப்பும் ஏற்படுத்தி தராமல் பணியை மேற்கொண்டு 05.05.2023 காலை வரை செயல்பட்டு வந்தனர்.

இந்நேர்வில் கடந்த 05.05.2023 தேதியன்று சுமார் காலை 09:50 மணியளவில் இடங்கணசாலை நகராட்சி நிர்வாகம் மற்றும் பணி ஒப்பந்ததாரர் ஆகியோரின் அலட்சியம் மற்றும் அஜாக்கிரதையினால் எனது தாயார் மகாலட்சுமி குடியிருக்கும் வீட்டில் இருந்து வெளியில் செல்லும்பொழுது அப்புறப்படுத்தாமல் இருந்த பெரிய கற்களினால் நிலைதடுமாறி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு நடு நெற்றி, கண்,மூக்கு, தலைப்பகுதி போன்ற இடங்களில் வெட்டு காயமும் மற்றும் கை, கால், கண் அருகில் இரத்தக் கட்டும் ஏற்பட்டது. அதன் பின் இளம்பிள்ளை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின் 108 வாகனத்தின் மூலம் சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இவர்களின் மனித உரிமை மீறல் காரணமாக என் தாயார் தலையில் பெரும் வெட்டு காயங்கள் ஏற்பட்டும், கை மற்றும் கால்களில் இரத்த கட்டுகள் ஏற்பட்டும் மிகுந்த மன உளைச்சலில் கஷ்டத்துடன் வாழ்ந்து வருகிறார். எனவே பாதிக்கப்பட்ட என் தாயாருக்கு உரிய இழப்பீடு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எந்தவொரு பாதுகாப்பும் ஏற்படுத்தாமல் விபத்து ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தில் அவசர, அவசரமாக வாரச்சந்தை மேம்பாட்டு பணியை மேற்கொண்டு மனித உரிமைக்கு எதிராக அலட்சியமாகவும், அஜாக்கிரதையாகவும், தன்னிச்சையாகவும், அதிகார துஷ்பிரயோகமாகவும் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதமாகவும் செயல்பட்டு, விபத்து ஏற்பட

காரணமாக இருந்த பணி ஒப்பந்ததாரர் மற்றும் இடங்கணசாலை நகராட்சி நிர்வாகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வாரச்சந்தை மேம்படுத்தும் திட்டத்தில் எனது குடிநீர் இணைப்புக்கு மாற்றுவழி ஏற்படுத்தித் தராமல் குடிநீர் இணைப்பை துண்டித்ததால் கடந்த 28.04.2023 தேதி முதல் இன்றுவரை 40 நாட்கள் ஆகியும் மனிதனின் அடிப்படைவசதியான குடிநீர் வசதியின்றி நாங்கள் பாதிக்கப்பட்டு வருகிறோம். அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வதற்கு அத்தியாவசியமானவைகளுள் குடிநீர் மிகவும் அவசியமானதாகும். இச்செயலானது, இடங்கணசாலை நகராட்சி அலுவலர்கள் / பணியாளர்கள் அதிகார துஷ்பிரயோகமாகவும், பொறுப்பற்ற தன்மையுடனும் தன்னிச்சையாகவும் செயல்பட்டுள்ளதை காட்டுகிறது.

மேலும் சட்டம் மற்றும் விதிகளுக்கு மாறாக அகற்றப்பட்ட குடிநீர் இணைப்புக்கு மாற்றாக புதிய குடிநீர் இணைப்பை உடனடியாக சீரமைத்து மீண்டும் ஏற்படுத்தி தருமாறு இடங்கணசாலை நகராட்சி ஆணையாளருக்கு 25.05.2023 தேதியன்று பதிவு தபால் மூலம் இது தொடர்பான புகார் மனுவை நான் தாக்கல் செய்தேன். ஆனால் அந்த புகார் மனுவின் உறையை கூட பிரித்து மனுவை படித்துப் பார்க்காமல் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் தீய எண்ணத்துடன் Refused என்று குறிப்பிட்டு தாக்கல் செய்த புகார் மனுவை அப்படியே திருப்பி அனுப்பிவிட்டார். இருப்பினும் மீண்டும் ஒரு புகார் மனுவை 31.05.2023 தேதியன்று பதிவு தபால் மூலம் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளருக்கு பதிவு செய்தோம். ஆனால் இன்றுவரை அடிப்படை தேவையான குடிநீருக்கு மாற்று ஏற்பாடு செய்து தராமலும், கண்டு கொள்ளாமலும் தீய எண்ணத்துடன் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் தொடர்ந்து மனித உரிமைக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். இவ்வாறு பொதுமக்களின் அவசர கோரிக்கையின் தன்மையை கருத்தில் கொள்ளாமல், அலட்சியமாக செயல்பட்டுவரும் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் மற்றும் பணியாளர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் குடிநீர் இணைப்புக்கு மாற்று ஏற்பாடு செய்து நிரந்தர தீர்வுகாண வேண்டுமாய் முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் இடங்கணசாலை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் தனது 26.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சேலம் மாவட்டம், இடங்கணசாலை நகராட்சி, காடையாம்பட்டி தெற்கு தெரு, வார்டு எண்.16, சர்வே எண்.214/2-ல் உள்ள இடமானது நகராட்சி வாரச்சந்தையாக பல ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளது. தற்போதுவரை தரையில் மட்டுமே தார்பாய் விரித்து வாரந்தோரும் திங்கட்கிழமை மட்டும் வாரச்சந்தை நடைபெற்று வந்ததால் பக்கத்து நிலத்துக்காரர்கள் நகராட்சி வாரச் சந்தை நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து பயன்படுத்தி வந்தனர்.

மேற்படி நிலத்தை இடங்கணசாலை பிட்-1 கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் நில அளவீடு செய்து உரிய நிலத்தின் அத்துக்கு மஞ்சள் நிற மார்க் குறியீடு செய்து குறிப்பிட்டுள்ளார்கள். அரசால் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் வாரச் சந்தையை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டின் கீழ் ரூ.94.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அரசாணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கட்டடம் கட்ட அரசின்

சிறப்புத்திட்டப்பணியாக இருப்பதால், பணியினை துவக்க வேண்டியிருந்ததால் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மனுதாரரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அகற்ற மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 182 (1), (2)–ன்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு அறிவிப்பு கடிதம் ந.க.எண்.02/2023/அ2, நாள் 20.03.2023 மற்றும் இறுதி அறிவிப்பு நாள் 28.03.2023–ல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.எம்.கார்த்திக் என்பவர் வாரச்சந்தை இடத்தில் அவர்களின் வீட்டின் முன்பிருந்த ACC Sheet-ஐ மட்டும் அகற்றிவிட்டு, நிலத்தடி நீர்த்தேக்க தொட்டியினை அகற்றாமல் அப்படியே விட்டுவிட்டார். எனவே வாரச் சந்தை கட்டுமானப் பணிதுவங்க இடையூறாக உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற இடங்கணசாலை நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.122/2023/அ1, நாள்.26.04.2023–ல் காவல் ஆய்வாளர் மகுடஞ்சாவடி அவர்களுக்கு ஆக்கிரமிப்பை அகற்ற பாதுகாப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் 28.04.2023 அன்று இரண்டு காவலர்கள் பாதுகாப்புடன் கட்டடப் பணியாளர்கள் மற்றும் JCB இயந்திரம் கொண்டு ஆக்கிரமிப்பினை அகற்றி, வாரச்சந்தை கட்டடத்திற்கு குழி எடுக்கப்பட்டது. அப்போது சர்வேயர் அளவீடு செய்து மார்க் செய்த புள்ளியில் இருந்து பொதுமக்கள் பாதை பயன்பாட்டிற்காக அரசுக்கு சொந்தமான தரிசு நிலத்தில் 14 அடி அகல நிலத்தை விட்டு குழியெடுக்கப்பட்டது. மனுதாரர் தெரிவித்துள்ளபடி பொதுப்பாதையை அடைக்கவில்லை. மனுதாரர் கூறிய கருத்து ஏற்கதக்கதல்ல. இப்பணி, பொதுமக்கள் நலன் கருதி, வாரச்சந்தை கட்டடம் கட்டுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி இடங்கணசாலை நகராட்சி மூலம் 28.04.2023 ஆம் தேதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் வாரச்சந்தை கட்டுமானப் பணிக்கு அடிதளம் அமைக்க குழி தோண்டப்பட்டதில் மனுதாரரால் ஆக்கிரமித்து கட்டப்பட்ட நிலத்தடி நீர்தேக்க தொட்டி அகற்ற அறிவிப்பு வழங்கியும், அகற்றாததால் நிலத்தடி நீர்தேக்க தொட்டி அதனோடு இணைக்கப்பட்ட குடிநீர் இணைப்பும் சேதம் அடைந்தது. ஆக்கிரமிப்பை அகற்றும் இப்பணியானது, நகராட்சி அலுவலர்கள் முறையாக ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அறிவிப்புகள் வழங்கி காவலர்கள் முன்னிலையில் கடைகள் கட்ட குழி தோண்டப்பட்டபொழுது, நகராட்சி அலுவலர்கள் யாரும் திரு.எம்.கார்த்திக், அவரது மனைவி மற்றும் தாயாரை ஒருமையில் பேசவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மனுதாரரால் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் ஏற்கத்தக்கதல்ல.

மேற்கண்ட பணி செய்யும் பொழுது அந்த பகுதிக்கு பாதுகாப்பு தடுப்பு ஏற்படுத்தப்பட்டது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது அதற்கான புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் தாயார் எங்கு எப்படி விழுந்தார் என்று தெரியவில்லை.

மேலும் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு 25.05.2023 அன்று பதிவு தபால் மூலம் இது தொடர்பான எவ்வித மனுவும் பெறப்படவில்லை. 31.05.2023 அன்று பதிவு தபால் மூலம் வரப்பெற்ற மனுதாரரின் தபால் பெறப்பட்டு, பின்னர் நேரில் கள ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மனுதாரர் திரு.எம்.கார்த்திக் என்பவரின் சேதமடைந்த குடிநீர் இணைப்பிற்கு பதிலாக அவரது வீட்டின் பின்புறத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் இடங்கணசாலை நகராட்சி ஆணையரும் 18.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.மா.கார்த்திக், 18.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்து பூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காடையாம்பட்டி வார்டு எண்.16–ல் உள்ள (இடங்கணசாலை பிட் II வருவாய் கிராம) சர்வே எண்.214/2–ன் மேற்கு பகுதி எல்லையில் சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக (கிராம நத்தம் குடியிருப்பாக புல எண்கள். 776/10, 776/11, 776/12, 776/13, 776/14, 776/16, 776/17, 776/18A, 776/18B, 776/18C ஆகியவற்றில்) 25–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் (சுமார் 80 நபர்கள்) குடியிருந்து வருகின்றனர்.

இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காடையாம்பட்டி வார்டு எண்.16–ல் உள்ள சர்வே எண்.214/2–ல் “கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2022–2023”–ன் கீழ் வாரச்சந்தை மேம்படுத்தும் பணி தொடங்கப்படுகிறது என தெரியவந்தது.

ஆனால் இந்த சர்வே 214/2 ஆனது 5.90 தீர்வை கொண்ட அரசு புஞ்சை தரிசு நிலமாகும். இப்பகுதியில் குடியிருக்கும் நாங்கள் இன்று வரை வீட்டிலிருந்து வெளியில் சென்று வர சர்வே எண்.214/2–ன் மேற்கு பகுதியிலுள்ள தென் வடலாகவும் வட தென்புறமாகவும் உள்ள அரசு புஞ்சை தரிசு நிலத்தில் சுமார் 50 அடி அகலம் கொண்ட இடத்தில் சுமார் 30 அடி அகலம் பொதுவழிப்பாதையாக பயன்படுத்தி வந்தோம்.

ஆகையால் கடந்த 30.01.2023 தேதியன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருமதி.அ.சுல்தானா அவர்களிடம் கழிவுநீர் கால்வாய் வசதியுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கக் கோரி நேரில் என்னால் கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கோரிக்கை மனு தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ந.க.எண்.408/2023/பி1 நாள்.02.02.2023 மனுவின் மீது உடன் நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தினை காலம் தாழ்த்தாமல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கும், மனுதாரராகிய எனக்கும் அனுப்பிவைக்குமாறு ஆணை, கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. இதன் நகல் மனுதாரராகிய எனக்கு தபால் மூலம் கிடைக்கப்பெற்றது. ஆனால் இன்றுவரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் ஆணைப்படி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமலும், மனுதாருக்கு எந்தவொரு விபரத்தையும் தெரிவிக்காமலும் இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் செல்வி.வே.நித்யா அவர்கள் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி சட்டம் மற்றும் விதிகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். மேலும் தமிழ்நாடு முதல்வர் தனிப்பிரிவு புகார் எண்.Bridges and Culverts (TN/MAWS/SLM/P/CMCAMP/02FEB 23/4970742) கொடுக்கப்பட்டது. இந்த புகார் மீதும் நகராட்சி ஆணையாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் கடந்த 30.01.2023 தேதியன்று வருவாய்த்துறைக்கு சொந்தமான சர்வே எண்.214/12 இடத்தில் வாரச்சந்தை மேம்படுத்தும் பணி தொடர்பாக JCB இயந்திர வாகனம் மூலம் குழிகள் தோண்டப்பட்டது மற்றும் மரங்கள் சேதப்படுத்தி அகற்றப்பட்டது. ஆகையால் டெண்டர் அறிவிக்கப்பட்டதா, அவ்வாறு டெண்டர் அறிவிக்கப்பட்டிருந்தால் டெண்டர் ID –யை தெரிவிக்குமாறு ஒப்பந்ததாரரிடம் கேட்டேன். ஆனால் ஒப்பந்ததாரர் டெண்டர் ID–யை தங்களிடம் தெரிவிக்க முடியாது என்று கூறிவிட்டு, மகுடஞ்சாவடி காவல் நிலையத்தின் காவலர்

பாதுகாப்புடன் பணியை மேற்க்கொண்டனர். அன்றைய தினமே எனது வீட்டின் அருகில் குடியிருக்கும் மணிமாறன் (188/016/900015) மற்றும் தங்கவேலு ஆகியோரின் குடிநீர் இணைப்பானது சேதப்படுத்தி உடைக்கப்பட்டது.

மேலும் கடந்த 03.02.2023 தேதியன்று இரவு 12 மணிக்கு வருவாய்த்துறைக்கு சொந்தமான சர்வே எண்.214/2–ல் உள்ள ஒரு மரத்தை JCB இயந்திர வாகனம் மூலம் உரிய அனுமதி இல்லாமல் இடங்கணசாலை நகராட்சி வார்டு 16 மற்றும் 17 ஆவது மன்ற உறுப்பினர்களின் கணவர்கள் மற்றும் பெயர் தெரியாத நபர்கள் என 10–ற்கும் மேற்பட்டோர் அகற்றினர்.

சர்வே எண்.214/2–ன் மேற்கு பகுதியில் கிராம நத்தத்தில் குடியிருக்கும் எங்களின் குடிநீர் இணைப்புக்கு மாற்றுவழி, சென்றுவர பொதுப்பாதை ஆகியவற்றை கருத்தில் கொண்டு வாரச்சந்தை மேம்படுத்துதல் பணி தொடர்பாக கட்டட வரைபட விவரங்களை கேட்டு பார்த்தபொழுது மொத்தம் 41 கடை என்ற விபரம் தெரியவந்தது. பின் இது தொடர்பாக இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் செல்வி.வே.நித்யா அவர்களிடம் நேரில் சென்று கேட்டபொழுது ஆக்கிரமிப்புகளை முதலில் அகற்றுங்கள் பிறகு குடிநீர் இணைப்புக்கு வேற்றுவழி மற்றும் சென்றுவர பொதுப்பாதை ஆகியவை ஏற்படுத்தி தருகிறேன் என வாய்மொழியாக தெரிவித்தார்.

பின் இச்சூழலில் நகராட்சி ஆணையாளர் செல்வி. நித்யா அவர்கள் அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 182 (1), (2)–ன்படி அளவு கடப்பு அகற்றுதல் தொடர்பான அறிவிப்பு கடிதமானது நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தாமல், ஒருதலைபட்சமாக இடங்கணசாலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காடையாம்பட்டி வார்டு எண்.16–ல் உள்ள சர்வே எண்.214/2–ன் மேற்கு புறம் தென்வடலாக ஒரு பகுதியில் குடியிருக்கும் சுமார் ஐந்து வீட்டு உரிமையாளருக்கு மட்டும் வழங்கி செயல்பட்டு வருகிறார். மனுதாரராகிய எனக்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 182 (1) (2)–ன்படி அளவு கடப்பு அகற்றுதல் தொடர்பாக அறிவிப்பு கடிதம் (ந.க.எண்.02/2023/அ2 நாள் 20.03.2023) மற்றும் இறுதி அறிவிப்பு கடிதம் (ந.க.எண்.247/2023/அ2 நாள் 28.03.2023) எனது வீட்டில் ஒட்டப்பட்டது. அதன்படி என்னுடைய சொந்த செலவில் நான் ஆக்கிரமிப்பை அகற்றி கொண்டேன்.

வருவாய் துறைக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்ட மற்றும் மரங்களை வெட்ட முறையான அனுமதி பெறாமலும் E-tender ஒப்பந்தம் வழங்காமல் இந்த கட்டடப்பணி நடைபெற்றுவருகிறது. மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் அரசு ஊழியர்கள் பொதுமக்களின் அவசர கோரிக்கையின் தன்மையை கருத்தில் கொள்ளாமல் அலட்சியமாக செயல்பட்டதால் பொதுமக்கள் ஆகிய நாங்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகிறோம். எனவே மிகுந்த கவனத்துடன் செயல்படாமல் அலட்சியமாக செயல்பட்டுவந்த இடங்கணசாலை நகராட்சி ஆணையாளர் செல்வி.வே.நித்யா, நகராட்சி பொறியாளர் திருமதி.ஏ.வி.ரேணுகா, பணி மேற்பார்வையாளர் திரு.பி.சந்தோஷ், நகரமைப்பு அலுவலர் (TPI) திரு.பிரேம் ஆனந்த் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து மேலும் பணி இடைநீக்கம் செய்தும் மற்றும் பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படும் வகையில் செயல்பட்ட M/s.V.P.M Co. ஒப்பந்தாரர் மீது பின்வரும் காலங்களில் எந்த ஒப்பந்தத்தையும் வழங்காமல் கடுமையான நடவடிக்கை எடுக்க முறைமன்ற நடுவத்தை பணிவுடன் பிரார்த்திக்கிறேன். மேலும் குடிநீர் இணைப்புக்கு மாற்று ஏற்பாடு செய்து நிரந்தர தீர்வுகாண வேண்டுமாய் முறைமன்ற நடுவத்தை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையர் பணிமாற்றம் செய்யப்பட்ட நிலையில் 17.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் இடங்கணசாலை நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக (பொ) பணியாற்றும் திரு.பிரேம் ஆனந்த் மற்றும் பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றும் திரு. வெ. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள இடங்கணசாலை நகராட்சி காடையாம்பட்டி தெற்கு தெரு, வார்டு எண் 16, சர்வே எண் 214/2ல் உள்ள இடம் நகராட்சியின் வாரச்சந்தையாக பல ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் இயங்கும் வாரச்சந்தைக்கான கட்டடங்களை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 94.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு 29.12.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே, மேற்கண்ட வாரச் சந்தை இடத்தை ஆக்கிரமித்து பாதையாக பயன்படுத்திவரும் மனுதாரர் மற்றும் 5 பேருக்கு 20.3.2023 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டு, மனுதாரரைத் தவிர மற்ற 5 பேரும் தங்கள் ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டனர். மேற்கண்ட ஆக்கிரமிப்புப் பகுதியை அகற்றாத மனுதாரருக்கு 28.3.2023–ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் தனது வீட்டின் முகப்புப் பகுதியில் உள்ள வழியை மறித்து நகராட்சியின் வாரச் சந்தையின் கட்டடம் கட்டப்படுவதாக தெரிவித்துள்ளது தவறு என்றும், மனுதாரருக்கான வீட்டிற்கான வழி அவரது வீட்டின் முன்பக்கம் உள்ள நகராட்சிப் பாதையில் இல்லாமல் அவரது வீட்டின் பின்புறம் உள்ளது என்பதையும், மேலும் அவரது வீட்டிற்கும், வார சந்தை கடைகளுக்கான கட்டடத்திற்குமிடைய போதுமான இடைவெளி உள்ளது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்தில் இடங்கணசாலை நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 26.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு, இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், இடங்கணசாலை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இடங்கணசாலை நகராட்சியில் பணியாற்றும் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், இடங்கணசாலையைச் சேர்ந்த மனுதாரர் திரு.மா.கார்த்திக் என்பவர் தனது 07.06.2023 நாளிட்ட மனுவில், இடங்கணசாலை நகராட்சியில் 2022 – 23 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் வாரச்சந்தை மேம்பாட்டு பணியினை மேற்கொள்ளும் போது, மனுதாரரின் குடியிருப்பிற்குட்பட்ட குடிநீர் இணைப்பு மாற்று ஏற்பாடின்றி 28.04.2023 அன்று துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நாள்வரை குடிநீர் இணைப்பு நகராட்சியால் வழங்கப்படவில்லை எனவும், மேற்காணும் வாரச்சந்தை மேம்பாட்டு பணியின்போது எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் பள்ளம் தோண்டியதால் மனுதாரரின் தாயாருக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், அதற்கு உரிய இழப்பீடு நகராட்சியினரால் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

இடங்கணசாலை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.16, சர்வே எண்.214/2–ல் அமைந்துள்ள இடத்தில் வாரத்தில் திங்கட்கிழமை மட்டும் நடைபெறும் வாரச்சந்தையின் இடத்தினை மனுதாரரும் மற்றும் 5 நபர்களும் ஆக்கிரமித்து வந்த நிலையில், 2022–23 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.94/– இலட்சம் மதிப்பீட்டில் வாரச்சந்தை பணிகளை நகராட்சியினர் மேற்கொண்டபோது மனுதாரரின் குடியிருப்புக்கு முன்பு ACC Sheet மற்றும் நிலத்தடி நீர்த்தேக்க தொட்டியினை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை தொடர்ந்து அதனை அகற்றிட வேண்டி மனுதாருக்கும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்துள்ள மற்ற 5 நபர்களுக்கும் ஆக்கிரமிப்பை அகற்றிடக் கோரி 20.03.2023 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டதில் மனுதாரர் ACC Sheet ஐ மட்டும் அகற்றி நீர்த்தேக்க தொட்டியினை அகற்றாமல் இருந்ததால் நகராட்சி மூலம் 28.03.2023 அன்று இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டும், மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்த பகுதியை அகற்றவில்லை என்பதையும் மற்ற 5 நபர்கள் தங்களது ஆக்கிரமிப்புகளை அகற்றியுள்ளதையும் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. மனுதாரர் ஆக்கிரமித்து கட்டியுள்ள நீர்த்தேக்க தொட்டியினை அகற்றாததால், நகராட்சியினர் காவல்துறையின் உதவியுடன் அகற்றியுள்ளதையும், இவ்வாறு ஆக்கிரமிப்பினை அகற்றும்போது மனுதாரரின் குடியிருப்புக்கான குடிநீர் இணைப்பு சேதம் அடைந்ததால், மனுதாரரின் வீட்டிற்கான வழியான அவரது வீட்டின் பின்புறத்தில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதையும் ஆணையரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் மனுதாரரின் குடியிருப்புக்கும் வாரச்சந்தை கடைகளுக்காக கட்டப்படும் கட்டடத்திற்கும் இடையே 14 அடி அளவில் போதுமான இடைவெளி விடப்பட்டுள்ளதை ஆணையரின் அறிக்கையின் மூலமும் மற்றும் மனுதாரர் புகார் மனுவின் மூலமும் அறிய முடிகிறது. நகராட்சிக்குட்பட்ட இடத்தில் கலைஞர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வாரச்சந்தைப் பணிகளை மேற்கொள்ள கட்டடங்களை கட்ட வருவாய்த்துறையின் அனுமதியின்றி நகராட்சியினரால் பணி மேற்கொள்ளப்படுகிறது என தெரிவிப்பதற்கு மனுதாரருக்கு எவ்வித தார்மீக உரிமையுமில்லை. மனுதாரரின் இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசுக்குச் சொந்தமான புறம்போக்குப் பரப்பில் மனுதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. தனது விருப்பத்திற்கு ஏற்ப வீட்டுக்கு முன்பு சாலை கேட்பது, பின்புற சாலை தனது சகோதரருக்கு அருகாமையில் உள்ளது என்பது வரம்பு மீறிய கோரிக்கைகளாகும்.

மேற்காணும் வாரச்சந்தை பணியினை நகராட்சியினர் மேற்கொள்ளும்போது துண்டிக்கப்பட்ட மனுதாரரின் குடியிருப்புக்கான குடிநீர் குழாய் இணைப்பினை மீண்டும் வழங்குவது குறித்து மனுதாரரின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு உரிய விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இடங்கணசாலை நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The petitioner has no right to demand disciplinary action against the local officials when he is blatantly in the wrong by encroaching on Government promboke land in front of his house and sideways. He has no locus standi or moral rectitude in

his petition. The Forum expresses its deep displeasure over such remarks by the petitioner and censure the petitioner.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.மா.கார்த்திக்,
க.எண்.143, காடையாம்பட்டி தெற்கு தெரு,
16–வது வார்டு, சேலம் மாவட்டம் – 635 502.

2) ஆணையாளர், இடங்கணசாலை நகராட்சி,
சேலம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (இணைப்புடன்)

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்

02/08/23